## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன்.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

#### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் 12 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு கொடுக்கல் வாங்கல் அல்லது நிகழ்வொன்று அல்லது நிலைமையொன்றுக்கு குறிப்பிட்ட இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் ஒன்று இல்லாத போது முகாமைத்துவத்தினால் கணக்கீட்டு கொள்கையொன்று உருவாக்கிப் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையினால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 1,486,109 ஆன நட்டக் கடன் ஏற்பாட்டிற்கு அடிப்படையாகக் கொண்ட நிச்சயமானதொரு கணக்கீட்டு கொள்கையை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் கிரயம் ரூபா 491,623,034 ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாகத் தேய்மானமிடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு இருந்தன. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுவானது இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் முற்றாகத் தேய்மானமிடப்பட்ட ஆனால் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்பானது கிரயம் அல்லது தேறிய கிடைக்கத்தக்க மதிப்பு போன்ற இரண்டில் மிகவும் குறைந்த மதிப்பில் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையினால் இருப்புக்களின் தேறிய கிடைக்கத்தக்க மதிப்பு மதிப்பீடு செய்யப்படாது 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் இருப்புக்களின் மதிப்பு அதன் கிரயமான ரூபா 13,125,629 --- ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இருப்புக்களின் மதிப்பு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்புற விளையாட்டரங்கு (Oudoor Stadium) கட்டிடத்திற்காக பெறுமானத்தேய்வு ரூபா 5,247,741 ஆல் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறையானது அப்பெறுமதியினால் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களுக்கான தேய்மான ஒதுக்கப் பெறுமதி சரியாகக் கணக்கில் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெற வேண்டிய நிலையான வைப்புக்களுக்கான வட்டி ரூபா 8,427,228 ஆன போதிலும் பெற வேண்டிய சரியான நிலையான வைப்பு வட்டி ரூபா 3,087,082 என்பதால் நிலையான வைப்பு வட்டி ரூபா 5,340,146 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. இதனால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது | எதிர்காலத்தில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான வைப்பிற்கான வட்டியைச் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நடைமுறையல்லாச் சொத்துக்களை கைப்பற்றியமையால் 2002 ஆம் வருடத்திலிருந்து 2019 அம் ஆண்டு வரையிலான 17 வருடங்களில் அதிகாரசபையினால் பெறப்பட்டிரந்த ரூபா 2,428,973,065 மற்றும் பெறப்பட்டிருந்த வருடங்கள் காட்டப்படாத ரூபா 4,683,439,544 ஆன 13 மானியங்களை நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களுக்கான நீக்கங்கள் சரியாகக் கணக்கிடப்பட்டு கணக்கில் காட்டப்படல் வேண்டும். |
| (ஈ) | தேசிய கட்டிட வரி வருமானம் மற்றும் செலவுகள் எதிரீடு செய்யப்பட்டுக் காட்டப்பட்டமையால் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் வருமானம் மற்றும் செலவு ரூபா 2,620,533 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | வருடத்தின் வருமானம் மற்றும் செலவுகள் சரியாகக் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 இணக்கப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் அறிக்கை

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | அண்மித்த அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| கடன் பட்டோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி | 10,177,372 | 4,332,943 | 5,844,429 | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இணங்காத மீதிகளை இனங்கண்டு சரியாக கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கு விடயங்கள் 14 இற்கான மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 7,369 மில்லியன் ஆன சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கான பயன்பாட்டு ஆவணங்கள், மீதி உறுதிப்படுத்தல்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அவ்விடயங்களை கணக்காய்வின் போது திருப்திரகரமாக கண்காணிக்கவோ அல்லது ஏற்றுக் கொள்வதற்கு முடியவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | மீதி உறுதிப்படுத்தலுக்குப் போதுமான மற்றும் நிபுணத்துவ கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடம் 1 முதல் 12 வரையான காலப்பகுதியில் பேணப்பட்டு வருகின்ற பெறுமதி ரூபா 14.350,656 ஆன வியாபார பெற வேண்டிய மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட வேண்டிய பணத்தை விரைவாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபைக்கு உரித்தான சேவை ஒப்பந்தம் இல்லாத காரணத்தினால் அறவிடப்படாத 10 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த ரூபா 6,288,763 ஆன வியாபார பெற வேண்டிய மீதி மீளாய்வாண்டில் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாமல் பதிவழிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய மீதிகளை பதிவழிப்பதற்குத் தேவையான அங்கீகாரம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இரு வருட காலப்பகுதியாகப் பேணப்பட்டு வருகின்ற 04 கணக்குகளுக்கான பெறுமதி ரூபா 11,704,699 ஆன மூலதன முற்பணம் 04 வருடங்களுக்கு மேலான காலத்திலிருந்து பேணப்படுகின்ற ரூபா 17,783,204 ஆன தேக்கி | எதிர்காலத்தில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்டகாலமாகப் பேணப்பட்டு வருகின்ற செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

வைக்கப்பட்ட தொகை, 3 வருடங்கள் தொடக்கம் 06 வரையான காலப்பகுதியில் பேணப்பட்டு வருகின்ற ரூபா 4,010,921 ஆன ஏனைய செலுத்த வேண்டிய கணக்குகள் முறையாகத் தீர்க்கப்படுவதற்கோ அல்லது பொறுப்பற்ற மீதிகளை புத்தகங்களில் எழுதப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1999 இன் 17 ஆம் இலக்க சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகாரசபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவு | முகாமைத்துவ சபையின் கீழுள்ள உறுப்பினர்கள் மாதத்திற்கு ஒரு முறையாவது சந்திக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 06 மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 109(1) | 400 மீட்டர் (Synthetic Athletic Track) ஓட்டப்பாதையை நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 13,713,615 ஆனது 2016 ஆம் வருட கணக்குகளில் பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் புத்தகங்களிலிருந்து நீக்கப்பட்டமைக்கான உத்தரவுகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணங்கள் 880 மற்றும் 891(1) | அதிகாரசபையின் காசுக்குப் பொறுப்பாகச் செயற்படும் உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையுடன் பிணைப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுத்த வேண்டும். |
| (இ) | 1988 இன் 74 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட தேசிய அரச சட்டமன்றத்தின் 1975 இன் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் சட்டத்தின் 1(இ) ஆம் பிரிவு | அதிகாரசபையின் நிறைவேற்றுத் தரத்திலான உத்தியோகத்தர் களிடமிருந்து 2018 மற்றும் 2019 ஆம் வருடங்களுக்காக சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுத்த வேண்டும். |
| (ஈ) | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதாரச் சேவைகள் கட்டணங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 2 ஆம் உப பிரிவின் (உ) பந்தி | அதிகாரசபையின் 2019 ஆம் ஆண்டின் காலாண்டிற்கு பொருளாதாரச் சேவைகள் கட்டண வரிக்கு உட்பட்ட வருவாய் ரூபா 12.5 மில்லியனைத் தாண்டியிருந்த போதிலும் ரூபா 169,044,326 ஆன வருவாய்க்காக ரூபா 845,222 ஆன பொருளாதார சேவைகள் கட்டண வரி செலுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | அதிகாரசபையின் 09 வாகனங்களுக்காக 2013 ஆம் ஆண்டின் பின்னர் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுத்த வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 63,533,031 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 80,179,897 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 16,646,866 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு செயற்பாட்டு வருமானம் ரூபா 29,081,374 ஆல் அதிகரித்தமை மற்றும் அரச மானியங்கள் ரூபா 54,650,000 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது நடைமுறை விகிதம் 2.42 இலிருந்து 0.92 வரை குறைவடந்திருந்தது. அதன் பிரகாரம் அதிகார சபையின் குறுங்கால பொறுப்பு தீர்ப்பனவு இயலுமை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் தொழில்நுட்பம், திட்டமிடல், ஊடகம், மின், உள்ளகக் கணக்காய்வு மற்றும் மதியுரை போன்ற பிரிவுகளில் சிரேஷ்ட மட்டத்தில் 07 வெற்றிடங்கள் உட்பட மொத்தம் 58 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. அத்துடன் அதிகாரசபையின் புதிய பதவியணிக்கான பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படுவதற்கு அதிகார சபை தவறியிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக ஆட்சேர்ப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் பயனுள்ள நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஒவ்வொரு நிதி வருடமும் ஆரம்பிப்பதற்கு முன்னர் வரவு செலவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் மீளாய்வாண்டிற்காக வரவு செலவுத் திட்டமொன்று தயாரித்து நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் காலப்பகுதிக்குள் அடையப்பட வேண்டிய நோக்கம் மற்றும் இலக்குகளை உள்ளடக்கியதாக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று 2019 ஆம் ஆண்டிற்காக தயாரித்து நிர்வாகச் சபையினால் அங்கீகரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பாதீட்டு மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்பட்டுக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட வேண்டியதுடன் முரண்கள் தொடர்பாக உரிய நேரத்தில் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். |